CNR NO: TNTH13-008482-2022

TNTH130084822022

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், போடிநாயக்கனூர்.**
**முன்னிலை – திருமதி.G.K.வேலுமயில், M.L.,MBA.,**
**நீதித்துறை நடுவர், போடிநாயக்கனூர்.**
**2023–ஆம் ஆண்டு மே மாதம் 22–ஆம் நாள் திங்கட்கிழமை**
**STC NO: 836/2022**

| | | | |
|---|---|---|---|
| 1. | குற்றம் முறையிடுபவர் | : | அரசு சார்பாக – சார்பு ஆய்வாளர்,<br>போடி நகர் காவல்நிலையம்,<br>குற்ற எண். 76/2020. |
| 2. | குற்றம் சாட்டப்பட்டவர்கள் பெயர், வயது, தந்தை பெயர் | : | 1). ஏஞ்சல் கிறிஸ்டி (40/2023),<br>க/பெ. பிரின்ஸ்பென்னி.<br>2). பிரின்ஸ்பென்னி (41/2023),<br>த/பெ. பன்னீர்செல்வம். |
| 3. | சம்பவ நாள் | : | 11.12.2019. |
| 4. | புகார் நாள் (குற்ற அறிக்கை தாக்கலான நாள்) | : | 02.02.2020. |
| 5 | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | : | A1:– 16.03.2020 (Surrender).<br>A2:– 16.03.2020 (Surrender). |
| 6 | எதிரிகள் பிணையில் சென்ற நாள் | : | A1:– 16.03.2020 (AP).<br>A2:– 16.03.2020 (AP). |
| 7. | குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டு | : | எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 323, 506(i)–ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. |
| 8. | எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டு | : | எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 323, 506(i)–ன் கீழ் குற்றசாட்டு வனையபட்டுள்ளது. |
| 9. | எதிரிகளின் பதில் | : | குற்றவாளிகள் இல்லை. |
| 10 | வழக்கின் விசாரணை தொடங்கிய நாள் | : | 20.03.2023. |
| 11 | வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள் | : | 24.04.2023. |
| 12. | தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | : | 22.05.2023. |

CNR NO: TNTH13-008482-2022

TNTH130084822022

| | | | |
|---|---|---|---|
| 13 | நீதிமன்றத்தின் தீர்மானம் | : | எதிரிகள் மீது இ .த.ச பிரிவுகள் 341, 294(b), 323, 506(i)–ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்யப்பட்டுள்ளது. |
| 14 | தீர்ப்பு | : | எதிரிகள் ஆஜர். முடிவில் அரசு தரப்பில், 1 எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 323, 506(i)–ன் கீழான வழக்கை சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கவில்லையென முடிவு செய்து , எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 323, 506(i)–ன் கீழான குற்றத்தினைப் பொறுத்து எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச 255(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் தடயம் எதுவும் தாக்கல் இல்லை. |
| 15 | குற்றம் சாட்டப்பட்டவருக்கு தீர்ப்பின் நகல் வழங்கப்பட்ட நாள் | : | இல்லை |
| 16 | காலதாமதத்திற்கான காரணம் | : | இல்லை. |

******

இந்த வழக்கானது 08.08.2022–ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் திருமதி. M. தவமணிசெல்வி M.A.,L.L.M, அரசு உதவி வழக்கறிஞர் நிலை –1 அவர்களும், எதிரிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு. A. சந்திரசேகரன், B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், 22.05.2023–ஆம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டும் , இரு தரப்பும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் , இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்..................

## தீர்ப்புரை

1). இவ்வழக்கின் வாதி பவுன்ராஜின் தாய்வழி பாட்டி மேரிதங்கத்தாயம்மாள்

என்பவருக்கு குரங்கணி கடலாறு புலத்தில் பூர்வீக நிலத்தில் இலவு , காப்பி, மிளகு, ஏலம், பாக்கு பயிரிட்ட விவசாயம் நிலம் உள்ளதாகவும் , வாதியின் பாட்டி நிலத்தில் விவசாயம் செய்வதில் வாதிக்கும் , வாதியின் சித்தி கலைசெல்விக்கும் பிரச்சனை ஏற்பட்டதால் வாதியின் சித்தி மற்றும் அவரது கணவர் புஷ்பராஜ் மீது குரங்கணி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தால் முன்விரோதம் கொண்ட கலைச்செல்வியின் மகளான 2–வது எதிரி பிரின்ஸ்பென்னியும் , 1–வது எதிரி ஏஞ்சல் கிறிஸ்டியும் சேர்ந்து 11.12.2019–ஆம் தேதி மாலை 17.30 மணிக்கு போடி அசேன் உசேன் தெரு அருகே வாதி காரை ஓட்டி வந்தபோது , வாதியின் காரை எதிரிகள் இருவரும் வழிமறித்து , வாதியை பார்த்து தேவிடியா பயலே யார் மேலே நீ காவல் நிலையத்தில் புகார் கொடுக்குறே என்று அசிங்கமாக திட்டி , வாதியின் சட்டையை எதிரிகள் இருவரும் பிடித்து காரை விட்டு வெளியே இழுத்து , கையால் மாறி மாறி கண்ணத்தில் அடித்து வாதிக்கு சிறுதன்மை காயத்தை ஏற்படுத்தி எதிரிகள் இருவரும் , வாதிக்கு இனிமேல் நீ குரங்கணி தோட்டத்திற்குள்ளே வந்தால் உன்னை அங்கேயே வெட்டி புதைத்து விடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக, போடி நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 323, 506(i)–ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என குறிப்பிட்டு தனிப்புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தனிப்புகாரானது கு .வி.மு.ச பிரிவு 190(1)(b)–ன் கீழ் கோப்புக்கு எடுக்கப்பட்டுள்ளது.

2). இவ்வழக்கின் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் அரசு தரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு .வி.மு.ச 207–வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

3). வழக்கு ஆவணங்களின் நகல்கள் எதிரிகளுக்கு படித்துப் பார்க்க போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டும் கு.வி.மு.ச 173–ன் கீழ் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலித்து எதிரிகள் மீது சொல்லப்பட்டுள்ள குற்றம் குறித்து வினவ போதுமான ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால்

எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 323, 506(i)-ன் கீழான குற்றங்கள் பற்றி வினவியபோது எதிரிகள் குற்றங்களை மறுத்து குற்றவாளிகள் இல்லை என்றார்கள் . எனவே அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**4). அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–**

**அ.சா.1 பவுன்ராஜ்** என்வர் அவரது சாட்சியத்தில், தான் தேவாரத்தில் குடியிருந்து, பாத்திரக்கடை வைத்து வேலை செய்து வருகிறேன் என்றும், சுமார் 2 வருடங்களுக்கு முன்பு போடி நகர் காவல் நிலையத்திற்கு ஒரு விசாரணைக்காக சென்றபோது போலீசார் தன்னிடம் ஒரு வெள்ளைத்தாளில் கையொப்பம் வாங்கினார்கள் என்றும் , தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் தன்னுடையது என்றும் , **புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.1** என்றும், வழக்கு சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்து, அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார்.

**அ.சா.2 தாத்தப்பன்** என்பவர் அவரது சாட்சியத்தில், தான் தற்போது போடி நகர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன் என்றும் , இவ்வழக்கின் புலனாய்வு அதிகாரியான சார்பு ஆய்வாளர் தாமரைக்கண்ணன் என்பவர் பணிமாறுதலாகி சென்றுவிட்டார் என்றும், ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், அவருக்கு கீழே தான் பணியாற்றியதால் அவரின் கையெழுத்து தனக்கு நன்கு பரிட்சயம் என்றும் , கடந்த 02.02.2020–ஆம் தேதி 11.30 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது பவுன்ராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று, நிலைய குற்ற எண். 76/2020, இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 323, 506(1)–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும் , **புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.2** என்றும், **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3** என்றும், அன்றையதினமே 18.15 மணிக்கு சம்பவ இடம் சென்று , சாட்சிகள் மகேந்திரன், பால்பாண்டி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு , ஒரு

பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும் , **பார்வை மகஜர் அ.த.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ .த.சா.ஆ.5** என்றும், அதன்பின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையான சாட்சிகளை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும் , இவ்வழக்கின் எதிரிகள் முன்ஜாமீனில் பிணையில் சென்றுவிட்டதால் அவரை கைது செய்யவில்லை என்றும் , பின்னர் வழக்கு விசாரணையை முடித்து, எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 323, 506(1)–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5). இவ்வழக்கில் எதிரிகளுக்கு எதிராக தோன்றும் சாட்சிகளின் சாட்சியம் குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச 313(1)(ஆ)–ன் படி வினவ, எதிரிகள் பொய் சாட்சியம் என்றார்கள். எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என கூறியதன்பேரில் , எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. இரு தரப்பும் கேட்கப்பட்டது.

6). எதிரிகள் மீது இ .த.ச பிரிவுகள் 341, 294(b), 323, 506(i)-ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றத்தை நிரூபிக்க அரசு தரப்பில் **அ.சா.1** முதல் **அ.சா.2** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு , **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.5** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7). இவ்வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் எதிரிகள் மீதான அரசு தரப்பு குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா ? இல்லையா? என்பதேயாகும்.

8). மேற்படி இவ்வழக்கில் **புகார் கொடுத்த அ.சா.1 பவுன்ராஜ்** என்வர் அவரது சாட்சியத்தில், அ.சா.1 தேவாரத்தில் குடியிருந்து , பாத்திரக்கடை வைத்து வேலை செய்து வருவதாகவும் , சுமார் 2 வருடங்களுக்கு முன்பு போடி நகர் காவல் நிலையத்திற்கு ஒரு விசாரணைக்காக சென்றபோது போலீசார் அ .சா.1–னிடம் ஒரு வெள்ளைத்தாளில் கையொப்பம் வாங்கினார்கள் என்றும் சாட்சியமளித்து, அரசு தரப்பில்

பிறழ்சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ள நிலையிலும், மேற்படி வழக்கின் சாட்சி **அ.சா.2–**ஆன புலனாய்வு அதிகாரியின் சாட்சியத்தை மட்டுமே வைத்து எதிரிகளுக்கு எதிரான அரசு தரப்பு வழக்கை அரசு தரப்பில் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபித்துள்ளார்கள் என்று கருத இயலாது.

9). எனவே, மேற்படி வழக்கில் அரசு தரப்பில் எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 323, 506(i)-ன் கீழான குற்றத்தினை சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10). எதிரிகள் ஆஜர். முடிவில் அரசு தரப்பில், எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 323, 506(i)–ன் கீழான வழக்கை சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கவில்லையென முடிவு செய்து, எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 323, 506(i)–ன் கீழான குற்றத்தினைப் பொறுத்து எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து, எதிரிகளை கு.வி.மு.ச 255(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் தடயம் எதுவும் தாக்கல் இல்லை.

இந்த தீர்ப்பானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று **2023–ஆம் ஆண்டு மே மாதம் 22–ஆம் நாள் திங்கட்கிழமை** திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

G K VELUMAYIL
Digitally signed by G K VELUMAYIL
Date: 2023.05.22 18:12:53 +0530

நீதித்துறை நடுவர்
போடிநாயக்கனூர்.

**பிற்சேர்க்கை**

**அரசு தரப்பு சாட்சிகள்-**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | … | திரு. பவுன்ராஜ் (புகார்தாரர்). |
| 2. | அ.சா.2 | … | திரு. தாத்தப்பன் (சிறப்பு சார்பு ஆய்வாளர்). |

CNR NO: TNTH13-008482-2022

TNTH130084822022

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்-</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | ... | புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் . |
| 2. | அ.சா.ஆ.2 | ... | புகார் வாக்குமூலம். |
| 3. | அ.சா.ஆ.3 | ... | முதல் தகவல் அறிக்கை. |
| 4. | அ.சா.ஆ.4 | ... | பார்வை மகஜர். |
| 5. | அ.சா.ஆ.5 | ... | மாதிரி வரைபடம். |

**<u>அரசு தரப்பு சான்று பொருள்-</u>** இல்லை.

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்-</u>** இல்லை.

G K VELUMAYIL
Digitally signed by G K VELUMAYIL
Date: 2023.05.22 18:12:58 +0530

நீதித்துறை நடுவர்,
போடிநாயக்கனூர்.

**<u>பின்குறிப்பு-</u>**

1. எதிரிகள் வழக்கு விசாரணையின் போது நீதிமன்ற காவலில் இல்லை.
2. வழக்கின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3. எந்த சாட்சிகளும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.